# அக்குறணையின் வரலாற்றுப் பின்னணி

ஜனாப் N.M. ஹலீம் (B.A. (Sri Lanka) Dip in Ed.

கண்டி மாநகருக்கு வடக்கே 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள அக்குறணை பிரசித்தி பெற்ற ஒரு முஸ்லிம் பிரதேசமாகும். ஆரம்பத்தில் அக்குறணை நகரை மையமாக கொண்ட ஒரு சிறிய பகுதியே அக்குறனை என அழைக்கப்பட்டது. காலம் செல்லச்செல்ல சூழவுள்ள சகல முஸ்லிம் கிராமங்களையும் வரையறுக்கப்பட்டு அக்குறணையைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்ற பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அக்குறணையின் புகழ் மேலும் அதிகரித்தது. 1988 இல் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவு 66 கிராமங்களை உள்ளடக்கியதாக ஆரம்பிக்கப்பட்டது. முழு இலங்கையிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது அக்குறணை பிரதேச சபையாகும். அக்குறணை என்ற பெயர் சிங்கள மொழிப்பெயரில் இருந்து பெரிதும் வேறுபடுவதைக் காணலாம். அக்குறணையை சூழவுள்ள குருகொட, பங்கொள்ளாமட, தீகல, பானகம, கஹவத்த, திப்பிட்டிய போன்ற பெயர்கள் சிங்கள மொழி நடையில் அமைந்துள்ளன. எனினும் அக்குறணை என்ற சொல்லுக்கு சிங்களத்தில் எவ்வித கருத்தும் இருப்பதாக விளங்கவில்லை. அக்குறணை அராபியரை அல்லது அவர்களது வழித்தோன்றல்களைக் கொண்ட ஒரு குடியேற்றமாக இருக்க முடியும் என்று கருதலாம். ஈராக்கின் பஸ்ரா நகருக்கு அருகேயுள்ள அல்குர்ணா (Alqurna) என்ற நகரோடு தொடர்புள்ளவர்கள் குடியேறியதால் இப்பெயர் வந்ததாக சிலர் கூறுகின்றனர். இங்குள்ள மக்கள் அல்-குர்ஆனை ஓதுபவர்களாக இருந்தமையால் இப்பெயர் வந்தது என இன்னும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தின் பரப்பு 32.39 சதுர கிலோமீட்டர்களாகும் (12.05 சதுர மைல்) இப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 1500 இக்கும் 2000க்கும் இடைப்பட்ட உயரத்தில் அமைந்துள்ளது. மலைநாட்டுக்குரிய காலநிலை இங்கு நிலவுகிறது. சராசரி வெப்பநிலை 24.7 (சதம அலகு) பாகை ஆகவும், வருடாந்த மழைவீழ்ச்சி 2000க்கும் உள்ளது. அக்குறணை பிரதேச சபையின் சனத்தொகை ஏறக்குறைய 55000 ஆகும். சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீட்டருக்கு 1903 பேராக (சதுர மைலுக்கு 4932) உள்ளது. சனத்தொகையில் 63.5% முஸ்லீம்களாகவும், 31.7% சிங்களவராகவும், 4.8% தமிழராகவும் உள்ளனர். இங்குள்ள சிங்களவர்கள் பெரும்பாலும் விவசாயத்திலும் அரசாங்கத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்க முஸ்லிம்கள் வர்த்தகத்தை அடிப்படைத் தொழிலாக கொண்டுள்ளனர். அண்மைக்காலத்தில் வாகன விற்பனை பழுதுபார்ப்பு போன்ற தொழில்கள் விருத்தியடைந்து வருகின்றன.

அக்குறணை முஸ்லீம்கள் இலங்கையிலுள்ள ஏனைய முஸ்லீம்களோடு எவ்வாறு தொடர்புபடுகின்றனர் என்பதையும் பார்க்க வேண்டும். ஆரம்பகாலத்திலேயே இலங்கையில் அராபியர் வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. கி.பி. 414 இல் சமுத்திரத்தை சூழவுள்ள அரபு நாடுகளையும் பாரசீகம், எகிப்து, அபீஸீனியா முதலிய நாடுகளையும் சேர்ந்த வர்த்தகர்கள் சீனா வரை வர்த்தகப் பிரயாணங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்து சமுத்திரத்தின் கரையோரமாக அமைந்த இவ்வர்த்தகப் பாதையில் தென்னிந்திய நகர்களும் இலங்கையின் கரையோர நகர்களும் முக்கிய தரிப்பிடங்களாக இருந்தன. தென்னிந்தியாவில் நீண்டகாலம் தங்கியிருந்த அராபியரும், அவர்களது பரம்பரையினரும் தென்னிந்திய முஸ்லீம்களும் கொழும்பு, பேருவளை, வெளிகம, காலி, மாதறை, புத்தளம், மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலிய கரையோர நகர்களிலும் அவற்றை அடுத்துள்ள பகுதிகளிலும் குடியேறினர். சிங்கள அரசர்கள் கண்டி, குருநாகல், கம்பளை முதலிய நகர்களில் ஆட்சிசெய்யத் தொடங்கியதும் உள்ளூர் பிரதேசங்களிலும் முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கி.பி. 1344 இல் இலங்கையை தரிசித்த இப்னு பதூதா குருநாகலினூடாக பாவாதமலையை தரிசிக்க சென்றுள்ளதாக குறிப்புகள் உள்ளன. இக்காலத்தில் குருணா

கலிலும் கம்பளையிலும் முஸ்லிம்கள் கணிசமான அளவு இருந்துள்ளனர். கி.பி. 1505 இல் போர்த்துக்கேயர் வருகையோடு கரையோர நகரங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர். கி.பி. 1526 இல் முஸ்லிம்களை கோட்டை இராசதானியிலிருந்து வெளியேறுமாறு போர்த்துக்கேயர் கட்டளையிட்டனர். கோட்டை பகுதியிலிருந்து வெளியேறிய முஸ்லிம்கள் சீதாவாக்கை பிரதேசத்தில் குடியேறினர். தொடர்ந்து 1526 இல் முஸ்லிம்கள் கோட்டை இராசதானியிலிருந்து வெளியேற்றப் பட்டனர். 1642 இல் மாத்தறையில் பெருந் தொகையான முஸ்லிம் ஆண்கள் கொல்லப்பட்டு பெண்களும் பிள்ளைகளும் அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறு போர்துக்கேயரால் கொடூரமாக நடத்தப்பட்ட முஸ்லிம்கள் கரையோர பிரதேசங்களிலிருந்து வெளியேற வேண்டியிருந்தது. இம் முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களின் உதவியுடன் கண்டி, மட்டக்களப்பு பிரதேசங்களில் குடியேற்றப் பட்டனர். இக்காலப்பகுதியில்தான் அக்குறணையிலும் முஸ்லிம் குடியேற்றம் ஏற்பட்டது எனக் கூறலாம்.

கண்டி மாநகரில் வருடாவருடம் நடைபெறும் பெரஹராவுக்கும் அக்குறணை மக்களின் குடியேற்றத்திற்கும் இடையே ஒரு தொடர்பு உண்டு. அக்குறணையில் குடியேறிய அராபிய ஆண்கள் இவ்வூர்வலத்தின் போதுதான் தமக்குரிய மனைவிமார்களை தெரிவுசெய்து கொண்டனர் என பரம்பரைக் கதையொன்று உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் கண்டியில் நீதிபதியாக கடமையாற்றிய ஏ.சி. லோரீ (A.C. Lowrie) என்பவர் கண்டி பிரதேசத்தின் வரலாறு பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இவரது அறிக்கையில் அக்குறணையில் எவ்வாறு குடியேற்றம் அமைந்ததென்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டி மன்னர் இரண்டாவது ராஜசிங்கனது காலத்தில் (1635 - 1687) இம்மன்னனுடன் சேர்ந்து போர்த்துக்யேருக்கு எதிராக போராடிய மூன்று அராபியர்களுக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட கிராமம் தான் அக்குறணை என குறிப்பிட்டுள்ளார். இக்காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் கண்டிப் பகுதியிலும் மட்டக்களப்பிலும் ஏனைய உள்ளூர் பகுதிகளிலும் குடியேற்றப்பட்டனர். அக்குறணை குடியேற்ற மும் இத்தொடர்பில் ஏற்பட்டிருக்க வேண்டும். கண்டி மன்னனுக்கு உதவி புரிந்த மூன்று அரேபியர்களையும் கண்டியில் குடியேற்ற விரும்பினான். மூன்று அரேபியர்களும் இப்பகுதியில் குடியேறு வதற்காக விவாகம் செய்துகொள்ள விரும்பினர். எனினும் உயர் குலப்பெண்களை இவர்களுக்கு மணமுடித்துக்கொடுக்க சிங்கள பிரதானிகள் விரும்பவில்லை. இதனால் கண்டி பெரஹரா நடக்கும்போது இவர்களுக்கான பெண்களை தெரிவுசெய்யும் ஒழுங்கு மேற்கொள் ளப்பட்டது. அரசனது உதவி பெற்ற இம்மூன்று அரேபியர்களும் பெரஹரா விழாவிற்கு வந்திருந்த மூன்று பெண்களை கவர்ந்து சென்று அரசமாளிகையில் மறைத்து வைத்துக் கொண்டனர். மறுநாள் இப்பெண்களின் உறவினர் தமது பெண்களை அரேபியர் கொண்டுசென்றதை அரசனிடம் முறையிட்டனர். அரேபியருடன் சென்ற பெண்களை அவர்களுக்கே மணமுடித்துக் கொடுப்பது நல்லதென்று அரசன் ஆலோசனை கூறினான். இதனை அப்பெண்களின் உறவினர் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் குடியேறிய கிராமமே அக்குறனை என குறிப்பிடப்படுகிறது. இந்நிகழ்வுக்கு முற்பட்ட காலத்திலேயே ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன. பங்கொள்ளாமட கிராமத்துக்கு அண்மையிலுள்ள துனுவில, குருகொட ஆகிய இடங்களில் முஸ்லிம்களை கொண்ட மடிகே கருமபீடங்கள் இருந்துள்ளன. தவளம் மாடுகள் மீது பொருட்களை ஏற்றிச்செல்வது தொடர்பான வேலைகளை நிர்வகிக்கும் கருமபீடமே மடிகே என அழைக்கப்பட்டது. இவ்வாறான மடிகேகள் சில அக்குறணையில் இருந்துள்ளது. நீரெல்லையிலுள்ள ஒரு காணியின் பெயர் காலஹேன தவளந்தன்ன வத்த என்பதாகும். இங்கு குடியேறியோர் சிங்களப் பெண்களையும் மணந்து கொண்டனர். மேலும் அக்குறணை முஸ்லிம்களது முன்னோரது பெயர்கள் பல தென்னிந்திய காயல்பட்டினத்தில் உள்ளவர்களது பெயர்களை ஒத்துள்ளதைக் காணலாம். அப்துல் காதிர் காயல்பட்டிணத்தில் பிரபல்யமான பெயராகும். முக்கால அக்குறணைப் பெண்கள் பலர் நாச்சியார் எனும் பெயரைக் கொண்டிருந்தனர். சிங்களவர் முஸ்லிம் பெண்களை ஆச்சி என மரியாதையாக அழைக்கும் பழக்கம் இச்சொல்லிலிருந்து மருவி வந்திருக்கலாம். கி.பி. 875 இல் மிஸிரு நாட்டிலிருந்து ஆண்களும் பெண்களுமாக மரக்கலம் மூல

மாக காயல்பட்டணம் வந்தடைந்தனர். பாண்டிய நாட்டு மன்னன் அவர்களுக்கு அளித்த பட்டயத்தில் எகிப்துப் பெண்களை நாச்சியார் பெண்டு எனக் குறிப்பிட்டுள்ளார். மரைக்கார், நைனார் எனும் பெயர்களும் காயல்பட்டணத்தில் வழக்கில் இருந்த பெயர்களாகும். குஞ்சிமல்கர் என்பவர் புத்தளம் சென்று கண்டி மன்னன் ஒருவனுக்கு செய்த பணிக்காக மல்வானஹின்னையில் குடியமர்த்தப்பட்டார் என மரபுக்கதை உண்டு. புகழ்பெற்ற ஆத்மீக ஞானி கசாவத்தை ஆலிம் அப்பா அவர்கள் குஞ்சிமல்கர் பரம்பரையில் வந்தவராவார். வரலாற்று ஆதாரங்களை நோக்கும் போது தென்னிந்தியாவில் குடியேறிய அரேபியரின் வழித்தோன்றல் களும் அக்குறணையில் குடியேறியுள்ளனர் எனக்கூறலாம். முஸ்லிம்கள் செறிந்து வாழும் பல கிராமங்கள் பொதுவாக அக்குறணை என குறிப்பிடப்படுகின்றன.

சிங்கள மக்களிடையே காணப்படுவது போன்றே மலைநாட்டிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் இன்றும் வம்சாவளிப் பெயர்கள் நடைமுறையிலுள்ளதைக் காணலாம். கோபாலமுஹாம்திரலாகெதர, கண்டியார் வீடு, கலுஹாமத்தார் வீடு, பீலிய வீடு போன்ற வீட்டுப் பெயர்கள் ஒவ்வொரு குடும்பத்தவரும் வாழ்ந்த இடம் செய்த தொழில் விவாகம்செய்து கொண்ட சிங்களப் பெண்களின் குலம் போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றன. முஸ்லிம்களிடேயே குலப்பேதம் காணப்படாத போதும் மானியமுறையில் அமைந்த சிங்கள சமூகத்தில் குலப்பிரிவு வேரூன்றி காணப்பட்டது. முதலிவம்சம், முதியான்சே வம்சம் போன்றன கொவிகுலத்தின் உயர் வம்சங்களாக இருந்தன. இக்குலத்தை சேர்ந்த பெண்களை விவாகம் செய்து கொண்டவர்களும் உயர்குலத்தவராகவே கருதப்பட்டனர். கருவா உரிக்கும் தொழிலில் சலாகம் எனும் தாழ்ந்த குலத்தினர் ஈடுபட்டனர். இக்குலப் பெண்களையும் முஸ்லிம்கள் விவாகம் செய்திருந்தனர். எனினும் முஸ்லிம்களிடையே இக்குலப் பிரிவுகள் காணப்படவில்லை. தியவதன நிலமே போன்றவர்கள் உயர்குலத்தவரிடமே உணவருந்துவர். எனினும் முஸ்லிம்களிடம் இவர்கள் உணவருந்தியதற்கான குறிப்புகள் உள்ளன. பொதுவாக முஸ்லிம்கள் சிங்கள உயர்குலத்தவர்களுக்கு சமமாக கருதப் பட்டனர்.

முஸ்லிம்களுடைய திறமை, அவர்கள் செய்துவந்த தொழில்கள், அரசகுடும்பத் தோடும் பிரதானிகளோடும் சிங்கள விகாரைகள் போன்றவற்றோடும் கொண்டிருந்த தொடர்புகள், இலங்கைக்கு வெளியே வெளி உலகோடு தொடர்பு கொள்ளும் அளவுக்கு முஸ்லிம்களிடயே காணப்பட்ட அறிவும் அனுபவமும் காரணமாக முஸ்லிம்கள் உயர்ந்த நிலையில் கருதப்பட்டனர். வெளிஉலகு பற்றிய செய்திகளையும் இலங்கையில் வெளிநாட்டவர் நடமாட்டம் பற்றிய செய்தியையும் கண்டி மன்னனுக்கு அறிவிப்பதில் முஸ்லிம்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். கண்டி மன்னனின் பாதுகாப்பு அதிகாரியாகவும், அரச சேவையிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். வர்த்தகம், விவசாயம் இவர்களது பிரதான தொழில்களாக அமைந்தன. பித்தளைப்பாத்திரங்கள் செய்தல், தங்க வெள்ளி நகை செய்தல் நெசவு போன்ற துறைகளில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களின் ஆரம்ப குடியேற்றத்தைத் தொடர்ந்து மேலும் குடியேற்றங்கள் ஏற்படலாயின. இவர்களின் சமையற்கலை பலரையும் கவர்ந்தது. உள்ஹூர் வியாபாரத்தில் பெரிதும் ஈடுபட்டனர். உள்ஹூர் உற்பத்திகளான பாக்கு, கருவா, ஏலம், மிளகு போன்ற வாசனை திரவியங்களை கரையோர நகரங்களுக்கு எடுத்துச்செல்வதும் அங்கிருந்து உப்பு, கருவாடு, புடைவை, பாத்திரங்கள் முதலியவற்றை மலைநாட்டுக்கு எடுத்துவருவதும் பெரும் இலாபம் அளித்த வியாபாரமாகும்.

இவர்கள் வியாபாரத்தோடு ஏனைய சேவைகளிலும் ஈடுபட வேண்டியிருந்தது. அக்குறணை மக்கள் மன்னனுக்கும் பிரதானிகளுக்கும் செய்த சேவைகளுக் காகவும், விகாரைகளுக்குச் செய்த சேவைகளுக்காகவும் நிலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அக்குறணையின் ஒரு பகுதியான கஹவத்தை, தளதா மாளிகையினால் உப்பு விநியோகம் செய்த ஒருவருக்கு வழங்கப்பட்டது. இவர் வருடா வருடம் தளதா மாளிகைக்கு இருபது கொத்து உப்பை வழங்கவேண்டியிருந்தது. தளதா மாளிகைக்கு சொந்தமான திப்பிட்டிய எனும் பகுதி ஏழு முஸ்லிம்களுக்கு கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு கொடுக்கப்பட்டது “ஹெவிசி பங்காகும்” ஹெவிசிபங்கு என்பது மேலம்

அடிப்பவர்களுக்கு கொடுக்கப்படும் ஒரு பங்காகும். மேளம் அடிக்கும் பிரவ பன்னிக்கி போன்ற சாதியினர் தாழ்வாக கருதப்பட்டனர். இச்சமூகத்தில் விவாகம் செய்துகொண்ட முஸ்லிம்கள் அச்சமூகத்தின் தொழிலை மேற்கொண்டிருக்க முடியும் என கருதுகின்றனர். அஸ்கிரிய அளுத் விகாரைக்கு சொந்தமான ஏராளமான காணிகள் அக்குறணையில் இருந்தன. இக்காணிகளை பயன்படுத்தியோர் விகாரைக்கு உப்பு, கருவாடு, புகையிலை, தோல், கயிறு முதலியவற்றை விநியோகம் செய்து வந்ததோடு வருடாவருடம் விகாரைகளில் நடைபெறும் மதவிழாக் களிலும் பிரசன்னமாயிருக்க வேண்டியி ருந்தது. தெகல்தொருவ விகாரைக்கு சொந்தமான காணியிலேயே பங்கொள் ளாமட பள்ளிவாசல் அமைந்துள்ளது. துனுவிலை கிராமத்தில் கண்டி தெகல்தொருவ விகாரைக்குச் சொந்தமான காணிகளை பங்கொள்ளாமடையைச் சேர்ந்த பலர் பெற்றிருந்தனர். பமுனுபொல எனும் இடத்தில் விகாரைக்குரிய காணிகளை முஸ்லிம்கள் பெற்றிருந்தனர். இவ்வாறு முஸ்லிம்கள் காணிகளைப் பெற்று சிங்களவரோடு பின்னிப்பிணைந்து சிங்களப் பெண்களை விவாகம் செய்து வாழ்ந்து வந்தனர். அவர்களது குடும்பப் பெயர்களும் சிங்களப் பெயர்களாகவே இருந்து வந்தன. விகாரைகளுக்குரிய காணிகளைப் பெற்று விகாரைகளுக்கு ஊதியமும் செய்து வந்துள்ளனர். முஸ்லிம் பெண்களும் மார்க்க அடிப்படையில் வாழ்ந்து வந்தனர். முஸ்லிம் பெண்கள் வெளியில் அன்னியர் மத்தியில் நடமாடுவதில்லை. எனவே முஸ்லிம்களின் தனித்தன்மை தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வந்தது. கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள் பூரண மதச்சுதந்திரம் அனுபவித்து வந்தனர். எவ்வாராயினும் அக்கால மானியமுறை சமுதாயத்தில் பல கட்டுப்பாடுகளும் இருந்தன. 17ம் 18ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்கள் சிங்கள மன்னர் பிரதானிகள் விகாரைகளின் குருமார்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாழவேண்டி யிருந்தது.

| | 1901 புள்ளிவிபரம் | |
|---|---|---|
| | மொத்த சனத்தொகை | முஸ்லிம்கள் |
| அக்குறணை | 340 | 340 |
| வெலிகெடிய | 248 | 248 |
| புளுகொஹதென்ன | 285 | 285 |
| குருகொடை | 412 | 407 |
| பன்கொள்ளாமட | 251 | 239 |
| தெலும்புகஹவத்த | 220 | 220 |
| தெமடகஸ்தென்னை | 115 | 115 |
| தெவடகஹமுலதென்ன | 135 | 132 |
| மல்வானஹின்னை (மாவலங்கேஹின்ன) | 192 | 192 |
| நீரெல்ல (நிலாஎல) | 303 | 303 |
| குருந்து கஹஎல | 146 | 130 |

1796இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் 1815இல் கண்டியையும் கைப்பற்றினர். ஆங்கிலேயரின் வருகையோடு முஸ்லிம்களின் அரசியல் கலாச்சார துறையில் பெருமாற்றம் ஏற்படலாயிற்று. சேனாதிபதி நோர்த் என்பவர் 1799இல் முஸ்லிம்களுக்கான சட்டவிதிகளைப் பிரகடனப்படுத்தினார். 1806இல் முஹம்மதியர்களுக்கான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1815இல் கண்டி கைப்பற்றப்பட்டதுடன் முஸ்லிம்கள் ஆங்கி லேயர் பக்கம் சேரத்தொடங்கினர். 1818இல் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் மூலம் கண்டிய முஸ்லிம்கள் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். முஸ்லிம்கள் மீது கண்டிப் பிரதானிகள் கொண்டிருந்த அதிகாரம் நீக்கப்பட்டதோடு முஸ்லிம்கள் தொடர்பான சிவில் குற்ற வழக்குகள் யாவும் ஆங்கிலேய அதிகாரி களால் நேரடியாக விசாரிக்கப்பட்டன. மடிகே முஹாம்திரங் களும் பிரித்தானிய அராசாங்க அதிகாரியி

னால் நியமிக்கப்பட்டனர். இதன் மூலம் முஸ்லிம்கள் படிப்படியாக சிங்களவரின் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டதோடு நீண்டகாலமாக நிலவிய சிங்கள முஸ்லிம் உறவும் வலுவிழக்கத் தொடங்கியது.

1820இல் இருந்து மலைநாட்டில் பெருந்தோட்டங்கள் விருத்தியடையத் தொடங்கின. முஸ்லிம்கள் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபடாதபோதும் அதனுடன் தொடர்புடைய வர்த்தகம் போக்குவரத்து நகர அபிவிருத்தி எனும் துறைகளின் மூலம் பணம் ஈட்டத்தொடங்கினர். 1868இல் கண்டி கொழும்பு புகையிரத பாதை திறக்கப் பட்டதும் கரையோர இந்திய வம்ச முஸ்லிம்கள் உள்நாட்டுக்கு வந்து வர்த்தகம் செய்யத்தொடங்கினர். இதனால் கண்டிய முஸ்லிம்களின் கலாச்சாரத் திலும் சில மாற்றங்கள் ஏற்படலாயின. தென்னிந் தியாவிலிருந்து வந்த முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் மார்க்க பிரச்சார வேலைகளில் ஈடுபடலாயினர்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபி விருத்தியடையத் தொடங்கியதோடு இலங் கையின் பொருளாதாரம் போக்குவரத்து சமூகசேவைத்துறை என்பன வளர்ச்சிய டையத் தொடங்கின. இதனைத் தொடர்ந்து தமிழ் சிங்கள மக்கள் ஆங்கிலம் கற்கத் தொடங்கினர். இது மக்களின் கலாச் சாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. இவ்வாறான மாற்றங்கள் கரையோரப் பகுதியிலும் ஏற்பட்டது. ஆரம்ப காலங்களில் கல்வி அறிவு உள்ளவர்களாக கருதப்பட்ட முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வி தமது மார்க்கத்தை பாதிக்கும் எனக்கருதி கல்வியை புறக்கணித்தமையால் கல்வித்துறையில் ஏனைய சமூகத்தரை விட பின்தங்கிக் காணப்பட்டனர். வசதிபடைத்த சில முஸ்லிம்களில் ஒரு சிலர் ஆங்கிலக் கல்வியைக் கற்றனர். எனினும் எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்ட ஒராபி பாசா 1883இல் இலங்கை வந்தார். இவரோடு சட்டத்தரணி சித்திலெப்பை செல்வந்தர் வாப்புச்சிமரிக்கார் முதலிய தலைவர்கள் ஒன்று சேரந்து முஸ்லிம்களிடேயே கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்த முற்பட்டனர். 1888இல் சேர் பொண் ராமநாதன் முஸ்லிம்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த மதமாற்றத்துக்குள்ளான தமிழர்களின் ஒரு பிரிவே எனக் குறிப்பிட்டார். இது முஸ்லிம்களிடேயே ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. முஸ்லிம்களின் முதல் சட்டத் தரணியான M.C. அப்துல் காதர் 1907இல் பிரதம நீதிபதியின் கட்டளையை ஏற்காது நீதிமன்றத்தினுள் தனது தொப்பியை கழற்ற மறுத்து நீதிமன்றத்திலிருந்து வெளியேறினார். இந்த தொப்பி விவகாரமும் முஸ்லிம்களிடையே ஒரு புத்துணர்வை உண்டுபண்ணியது.

இலங்கை முஸ்லிம்களிடேயே ஏற்பட்ட இவ்வாறான மாற்றங்கள் அக்குறணை முஸ்லிம்களையும் பாதிக்கலாயிற்று. அக்குறணை மக்கள் கல்வி அரசியல் துறைகளிலும் கவனம் செலுத்தத் தொடங்கினர். அக்குறணையை உள்ளடக்கிய உடகம்பஹ பல்லேகம்பஹ கிராம சபைகளில் ஒரு சில முஸ்லிம்கள் இடம்பெறலாயினர். இக்கிராம சபைகளின் தலைவர்களாக முஸ்லிம்கள் பல வருடங்களாக இருந்துள்ளமை குறிப்பிடக் கூடியதொரு அம்சமாகும். பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பொருத்த மட்டில் 1960இல் அக்குறணை தேர்தல் தொகுதியின் பிரதிநிதியாக ஜனாப் A.C.S. ஹமீட் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். 1977இல் வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்ற இவர் நிதியமைச்சு உயர்கல்வி அமைச்சு என்பவற்றையும் ஏற்று நடத்தியுள்ளார். இவர் தொடர்ந்து 39 வருட காலம் பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அக்குறணை மக்களின் கல்வி வரலாற்றை நோக்கும் போது 1888இல் அரபு கற்பிக்கும் ஒரு பாடசாலை (மத்தரசா) இருந்ததாக பிரித்தானிய நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குர்ஆன் ஓதுதல் மதக்கல்வி போன்றவற்றிலேயே ஆரம்பத்தில் முஸ்லிம்கள் கவனஞ் செலுத்தினர். தென்னிந்தியாவிலிருந்து வந்த பலர் அறபு கற்பிக்கும் பணியிலும் மார்க்க அறிவைப் பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தனர். கிருஸ்தவ மிஷனரிமாரால் நகர்புறப் பாடசாலைகளுக்கு சில வசதிபடைத்த முஸ்லிம்கள் தமது பிள்ளைகளை அனுப்பி கற்பித்த போதும் பெரும்பாலான அக்குறணை முஸ்லிம்கள் கல்வியில் நாட்டம் குறைந் தவர்களாகவே காணப்பட்டனர். 1907ம் ஆண்டளவில் இன்று அஸ்ஹர் மத்திய கல்லூரி என அழைக்கப்படும் பாடசாலையும் 1938இல் புளுகொஹதென்னையில் ஒரு பாடசாலையும் (அக்குறணை சாஹிரா கல்லூரி) 1942இல் குருகொடை பெண்கள் பாடசாலையும் 1946இல் அக்குறணைப் பெண்கள் பாடசாலையும் ஆரம்பிக்கப் பட்டன. இதனைத்தொடர்ந்து குருகொடை ஆண்கள் பாடசாலை மல்வான ஹின்னை

முஸ்லிம் பாடசாலை முதலிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று ஏறக்குறைய 11000 பிள்ளைகள் மட்டில் கல்வி கற்கிறார்கள். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண் பிள்ளைகளாகும். இப்பெண்பிள்ளைகளுக்கு சகல வசதிகளோடும் அமைந்த பெண்கள் பாடசாலைகள் இல்லாமல் இருப்பது ஒரு பெரும் குறையாக உள்ளது.

அக்குறணை முஸ்லிம்களது மத கலாச்சார தன்மைகளை நோக்கும் போது இஸ்லாமிய மதக்கோட்பாட்டு அடிப்படையில் ஒற்றுமைப்பட்டு காணப்படுகின்றனர். இஸ்லாத்தின் அடிப்படைக் கடமையான தொழுகை. ஸகாத், நோன்பு, ஹஜ் என்பவற்றை நிறைவேற்றுபவர்களாகவும், மார்க்க கடமைகளில் ஆழ்ந்த பற்றுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். நீண்ட காலமாக மார்க்க அறிஞர்களின் போதனைகளை அப்படியே ஏற்றுக் கொள்பவர்களாக காணப்பட்ட இம்மக் களிடையே அண்மைக் காலத்தில் ஆராய்ச்சிகள் மூலமாக உண்மையாக இஸ்லாமிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் தன்மை ஏற்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பசுமையான பாரம்பரியங்களை சான்று பகர்ந்து நிற்கும் அக்குறணை குறிப்பிடக் கூடிய ஒரு கிராமமாகும்.